கோவை சிறுவாணி குடிநீர்த் திட்டம்

வினா எண் 636 திரு. மா. சின்னராசு: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறைஅமைச்சர்கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா?

(அ) கோவை-சிறுவாணி குடிநீர்த் திட்டத்தின் கீழ் தொண்டாமுத்தூர் தொகுதியில் (அதாவது கோவை நகருக்கு மேற்கு) எத்தனை கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்யப்படும்?

(ஆ) மேற்கொண்டும் சில கிராமங்களை இத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) 16 கிராமங்கள்.

(ஆ) இயலாது.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, Wayside Village Scheme என்ற திட்டத்தின்கீழ் சிறுவாணி குழாய்கள் வருகிற பகுதிகள் தொண்டாமுத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த நான்கே நான்கு கிராமங்கள் தவிர அத்தனை கிராமங்களின் வழியாக வந்து, அத்தனை கிராமங்களும் பயன்பெற்றிருக்கின்றன. மாயம்பட்டி — தென்கரை என்ற பேரூராட்சியும், வேளாம்பட்டி—தெனமல்லூர் என்ற இரண்டு கிராமப் பகுதிகள் மட்டுமே விடப்பட்டிருக்கின்றன. அந்த கிராமங்களின் வழியாகவும் இந்தக் குழாய்கள் செல்லுகின்றன. அதற்குத் தேவையான தண்ணீர் மிகக் குறைவாக இருக்கிறது. அரசு எல்லா கிராமங்களுக்கும் தண்ணீர் கொடுக்கின்றபோது இந்த கிராமங்கள் விடப்பட்டால் அந்த கிராம மக்களுக்கு அதிருப்தி ஏற்படும் என்ற காரணத்தினாலும், மிகுந்த குறைவான அளவே செலவு ஏற்படும் என்ற காரணத்தினாலும் இவைகளையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று நான் கோரிக்கை விடுத்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு இதைச் சேர்த்துக் கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, ஆலந்துறை, புலவர்பட்டி, பேரூர், தொண்டாமுத்தூர், வடவள்ளி, தாயூர் வீரகிழாரம், குறிச்சி, குரியமுத்தூர், சூலூர், தித்திப்பாளையம், பேரூர்செட்டிப் பாளையம், நரசிபுரம், மாதவராயபுரம், தேவராயபுரம், செம்பேடு, ஆகிய 16 வழிவரும் கிராமங்களுக்கும் தண்ணீர் தருகிறோம். சிறுவாணி தண்ணீரில் இருந்து எவ்வளவு எடுப்பது என்று முடிவாகி இருக்கின்றது. அதைத்தான் வழிவரும் கிராமங்களுக்குக் கொடுக்க முடியும். அதற்கு மேல் அதிலிருந்து தண்ணீர் எடுக்க முடியாது. இதைத்தவிர வேறு வழிவரும் கிராமங்களுக்கு சிறுவாணி நீர்திட்டத்தில் இருந்து கொடுப்பதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே இந்த (Way side Village Scheme) திட்டத்தில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு? இதில் ஊராட்சி மன்றங்களுடைய செலவை பொறுத்தவரையில் அரசு மானிய

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாக ஏற்றுக் கொள்கின்றது. பேரூராட்சி பகுதிகளுக்கு அது மிக சின்ன குக்கிராமங்களைக் கொண்டதாக இருக்கின்ற பேரூராட்சிகளாக இருக்கின்ற காரணத்தால், அந்த செலவை மானியமாக அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. பெரும்பாலான அந்தப் பேரூராட்சிகள் அந்தத் திட்டச் செலவை கட்டமுடியாமல் இருக்கின்றன. ஆகவே இதையும் மானியமாகவே ஏற்றுக் கொண்டு சில இடங்களில் அது நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கின்றது. அதேபோல் இதையும் மானியமாக ஏற்றுக் கொள்ள அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின் கீழ் எப்போது அந்த கிராமங்களுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, கேள்வி, கோவை சிறுவாணி குடிநீர்த் திட்டத்தின் கீழ் தொண்டாமுத்தூர் தொகுதியில் (அதாவது நகருக்கு மேற்கு) எத்தனை கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்யப் படும் என்பது பற்றியதாகும். அது பற்றிய தகவல்களைக் கொடுத்திருக்கிறேன். மற்றத் தகவல்களுக்கு தனிக் கேள்வி போட்டால் தருகிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில்சொல்லுகின்ற நேரத்தில் சிறுவாணி குடிநீர் திட்டத்தின் கீழ் 16 கிராமங்களுக்கு விரிவாகக்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள். புதிதாக அறிவிக்கப்பட்டிருகின்ற மாநகாராட்சிக்குட்பட்ட காளப்பட்டு பகுதிகளுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, கேள்வி நகருக்கு மேற்குபகுதியைப் பற்றியது. அந்த ஒரு பகுதியைத்தான் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே உள்ள 16 கிராமங்களைப் பற்றி தகவல் கொடுத்து இருக்கிறேன். தங்களுக்கு கீழ்ப் பகுதி வேண்டும் என்றால் அதற்காக தனிக் கேள்வி போட்டால் தகவல் தருகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

வைகைத் தண்ணீரை கம்பிக்குடி மற்றும் பெரியகண்மாய் களுக்கு திருப்பி விடும் திட்டம்.

வினா எண் 637—திரு. எம். பிச்சை : மாண்புமிகு நீர்ப்பாசனத் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் நிலையூர் கண்மாயில் வரும் வைகை தண்ணீரை உலகாணி கால்வாய் மூலம் அருப்பு கோட்டை தொகுதியில் உள்ள கம்பிக்குடி மற்றும் பெரிய கண்மாய்களுக்கு திருப்பி விட அரசிடம் திட்டமுள்ளதா?

(ஆ) இக்கால்வாய் ஆழப்படுத்தப்படுமா?

(இ) ஆம் எனில், வேலை எப்பொழுது தொடங்கும்,

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) இல்லை